சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **247 / 2021**

பெயர்: கலைசெல்வி ம.சா. 1 தேதி **18.03.2025**

மனுதாரர் தரப்பில் சாட்சியை மீண்டும் விசாரிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

என்னுடைய PAN Card ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.9 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் போலீசார் தயாரித்த மாதிரி வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரி வரைபடத்தில் சம்பவம் கிழக்கு திசையில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி மாயனூர் காவல் நிலைய குற்ற எண். 128/2018 வழக்கின் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் எ.ம.சா.ஆ.2 மற்றும் 3. சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் மேற்படி குற்ற வழக்கானது காலாவதிதோசம் காரணமாக நிராகரிக்கப்பட்டுள்ளதாக தான்குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி உத்தரவில் நான் நான்கு சக்கர வாகனத்தை அஜாக்கிரதையாக ஓட்டவில்லை என முடிவு எட்டப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்களினால் ஏற்பட்ட மருத்துவசெலவிற்கு நான் உரிய காப்பீட்டு நிறுவனத்திடம் 100 சதவீதம் பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் 50 சதவீதம் தான் பெற்றேன். நான் மேற்படி சங்கதிகளுக்கு ஆதரவாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை. நான் அசல் மருத்துவ பில்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்தினால் நான் முழுமையாக குணமடைந்துவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு முழு காரணம் என்னுடைய அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.